**O.S.105/2021**

Date : 22.08.2024.

வா.சா.1 : துர்கா

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். நான் B.Sc Botany படித்துள்ளேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். என் கணவர் எலக்ரீசன் கான்ட்ரக்ட் ஒர்க் எடுத்து நடத்திவருகிறார். பிராதில் நான் கொடுத்துள்ள மதுரை விலாசத்தில் எத்தனை வருடம் குடியிருந்து வருகிறேன் என்றால் 4 , 5 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு அம்மாவீட்டில் குடியிருந்து வந்தேன். எனக்கு 2014 ல் திருமணம் நடைபெற்றது. எனக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இரண்டு பேரும் மதுரையில் படிக்கின்றனர். இந்த வழக்கை நான் எதற்காக போட்டுள்ளேன் என்றால் நான் கொடுத்த பணத்தை வாங்குவதற்காக போட்டுள்ளேன். பிரதிவாதிக்கு எந்த ஊர் என்றால் களக்காட்டில் வாடகை வீட்டில் இருந்தார். தற்போது பள்ளிவாசலில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். பிரதிவாதி களக்காட்டில் இருந்ததற்கான எந்தவிதமான ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராது மற்றும் ஆவணங்களில் பிரதிவாதியின் விலாசம் S.N. பள்ளிவாசல் என்றே நான் போட்டுள்ளேன் என்றால் சரிதான். S.N. பள்ளிவாசலுக்கு நான் எத்தனை முறை சென்றுள்ளேன் என்றால் நான் அங்கு போனதில்லை. பிரதிவாதி வீடு S.N. பள்ளிவாசலில் எந்த தெருவில் உள்ளது என்று எனக்கு தெரியாது. என் அம்மாவின் பெயர் அங்காள ஈஷ்வரி என்பதாகும். அவர் பீடி சுற்றுவார். என் தாயார் அசல் வட்டி கேட்டு பிரதிவாதியின் கணவரிடம் தகராறு செய்ததால் 13.12.2020 ம் தேதி களக்காடு காவல் நிலையத்தில் ஆன்லைன் மூலம் புகார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் மதுரையில் இருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 எங்கு வைத்து எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பத்திர அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஐ தயாரித்தவர் கணபதி ஆறுமுகம் என்றால் சரிதான். அந்த விலாசத்தில் வைத்துதான் எழுதப்பட்டது. வா.சா.ஆ-1 சாட்சி கையொப்பம் யார் போட்டுள்ளார்கள் என்றால் கதீஜா பீவி யின் கணவரும் அவரது தம்பி மனைவியும் போட்டுள்ளார்கள். அவர்கள் இரண்டு பேரையும் விசாரணை செய்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். பணம்

கொடுத்ததாக சொல்லப்படுவதில் நான் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் முதலில் யார் கையொப்பம் போட்டார் என்றால் கதீஜா பீவி போட்டார். கதீஜா பீவி கையொப்பம் போட்டு வெளியே வந்த பின்பு மற்ற சாட்சிகள் ஒவ்வொருவராக தனித்தனியாக போட்டார்கள். சாட்சி கையெழுத்துகள் பத்திர அலுவலகத்தில் வைத்து போட்டார்கள். பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அவருக்கும் எனக்கு எத்தனை வயது வித்யாசம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுமாராக 12 வயது வித்யாசம் இருக்கும். நான் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்று சொல்லியிருப்பதில் அந்த வீடு யார் பெயரில் இருக்கிறது என்றால் பிரதிவாதியின் கணவர் பெயரில் உள்ளது. நான் பணம் கொடுக்கும் காலத்திற்கு முன் பிரதிவாதியின் கணவர் எத்தனை முறை ஈஸ்வரி என்பவரிடம் அசல் மற்றும் வட்டி பணம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் அம்மா ஈஸ்வரி களக்காட்டில்தான் உள்ளார். அவரை விசாரணை செய்தால் மேற்கண்ட விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் பணம் கொடுத்ததற்கு முன்பாக பிரதிவாதியின் கணவர் என் அம்மாவிடம் பணம் ஏதும் பெற்றாரா அல்லது ஆவணம் ஏதும் எழுதி கொடுத்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி மீது நான் போட்டுள்ள வழக்கில் அவர் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் தொடர்பாக நான் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் பிரதிவாதி போட்டுள்ள எதிர்வழக்குரைக்கு எவ்வித ஆட்சேபணையும் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு தனிப்பட்ட வருமானம் ஏதும் இல்லை என்றால் நான் சீட்டு போடவும் சீட்டு பிடிக்கவும் செய்வேன். அதற்கு உரிமம் ஏதும் இல்லை. நான் அந்த விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பணம் கொடுத்த காலமான 2020 ஆம் ஆண்டுக்குரிய வருமான வரி கணக்கை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் சரிதான். பணம் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் நான் எத்தனை 500 மற்றும் 1000 தாள்கள் கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் நோட்டுகள் மட்டுதான் கொடுத்தேன். மொத்தம் எத்தனை என்று தெரியாது. அது பத்திர அலுவலகத்தில் வைத்து கொடுத்தேனா என்றால் வீட்டில் வைத்து கதீஜா பீவியிடம் கொடுத்தேன். பத்திர அலுவலகத்தில் கையெழுத்து

மட்டும் போட்டோம். வீட்டில் வைத்து பணம் கொடுக்கும் போது கதீஜா பீவி, என் சித்தப்பா குணசேகர், அக்கா தீபா, கதீஜா பீவியின் கணவர் இம்ரான் பாஷா, அவரின் தம்பி பெயர் நியாபகம் இல்லை, தம்பி மனைவி ஆகியோர்கள் உடன் இருந்தனர். ஆவணத்தை எழுதுவதற்கு விவரம் கூறியது யார் என்றால் நான்தான் கூறினேன். என்னிடம் காட்டப்படும் பிராதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிராதில் வழக்கு மூல பகுதியில் பிராமிசரி நோட்டு எழுதி கொடுத்த 21.02.2018 தேதியிலும் புரோ நோட்டு தொகையை வட்டியுடன் சேர்த்து செலுத்தும்படி பிரதிவாதியை பல முறை துயர்ந்து கேட்ட நாட்களிலும் கடந்த 19.12.2020 ம் தேதி பிராமிசரி நோட்டு தொகையை வட்டியுடன் செலுத்த கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய தேதியிலும் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு பணத்தை நேரில் கேட்கவில்லை என்றால் நேரில் கேட்டுள்ளேன். பணம் கேட்க செல்லும் போது நான்மட்டும்தான் போவேன். நான் எந்தெந்த தேதி, மாதம் வருடம் போனேன் என்று எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிஸ் புகார் பற்றி எனக்கு தெரியாது என்று நான் சொல்லியிருப்பதில் அந்த விவரம் பற்றி என் அம்மாவிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் என் தாயார் மீது பொய்யாக புகார் கூறியுள்ளார். பிரதிவாதி புகார் கொடுத்த சம்பவத்திற்கு பின்புதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மேற்கண்ட சம்பவம் எனக்கு தற்போதுதான் தெரியவந்தது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-2 ஆவணம் 19.02.2020 தேதியில்தான் அனுப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 02.01.2021 ல்தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். பிராது 17.02.2021 ல்தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என்னிடம் இருந்து பிரதிவாதி 3 லட்சம் பெறவில்லை என்றாலும் என் அம்மாவிடம்தான் பிரதிவாதியின் கணவர் 2 லட்சம் பெற்றார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஈஸ்வரியும் பிரதிவாதியின் கணவரும் அவசிய தரப்பினர் என்று எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதில் அவர்கள் இருவரையும் கட்சி சேர்க்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி என்ன வேலை பார்க்கிறார் என்றால் இல்லத்தரசியாக உள்ளார். அவருக்கு வேறு எந்த வருமானமும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கணவர் 2017 ம் வருடத்திலேயே என் அம்மாவிடம் கடன் பெற்றுவிட்டார் என்றும் அந்த விவரம் எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. என்னிடம்தான் வாங்கினார். பிரதிவாதி ஒரு இஸ்லாமிய பெண்மணி என்றாலும் வெளியில் எல்லா இடத்திற்கும் செல்லமாட்டார் என்றாலும் சரிதான். என்னுடைய

பிராது காலவரையறை சட்டத்தின் படி தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் நான் கூறியுள்ள 2% வட்டி எவ்வளவு என்றால் 3 லட்சத்திற்கு 1 மாதத்திற்கு 6,000 ஆகும். நான் கூறியிருப்பது ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதத்திற்கு மாறானது என்றால் சரியல்ல. நான் பிராதில் கூறியுள்ள அசல் மற்றும் வட்டி தொகைகள் பிரதிவாதியின் கணவரால் செலுத்தப்பட்டுள்ளது என்றாலும் அதனால் எந்த தொகையும் செலுத்தவேண்டியதில்லை என்றாலும் அதில் கூறியுள்ள அசல் மற்றும் வட்டி தவறு என்றாலும் சரியல்ல. கருப்பொருட்களை மறைத்து பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் பிராது தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.